முருகப்பெருமான் துணை

**மகான் சிவவாக்கியர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.06.2023, திங்கட்கிழமை

1. வளமான பாரதம் அமைய
வள்ளலாக வந்த ஞானியே5
பலமான தொண்டர் படைகளை
பக்குவம்பட உருவாக்கி உலகில்
2. உலகினில் அற்புதம் படைக்க
உயர்வாக வந்த தவசியே
கோலமதாய் அரங்கனுன் பலம்கூறி
குறைவிலா அறிவுரை ஆசி
3. ஆசினை சோபகிருது மிதுனதிங்கள்
அய்யமற சதுர் திகதி சோமவாரம்

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 04 ம் நாள், 19.06.2023, திங்கட்கிழமை)

நேசமுற சிவவாக்கியர் யானும்
நிலவுலகம் பாதுகாப்புற உரைப்பேன்

4. உரைக்கவே ஞானிகள் காட்டும்
உயர்வழியே சன்மார்க்க அறநெறி
மறைபோற்றும் ஞான வழிகளாக
மக்கள் மதித்துப் போற்றி ஏற்று
5. ஏற்றுவர தன்னலம் விலகி
எல்லாம் பொது உடைமை எனும்
ஆற்றலாக மாற்றம் கூடி
அனுகிடும் அரங்கன் சேவை வழி
6. சேவைவழி உயர் தொண்டர்களாக
சிறப்பு நிலை கூடி நிற்கும்
அவனியெங்கிலும் மாற்றமும்
அரங்கன் தவ தரும பலத்தால்

7. பலத்தால் படைகளாக மாறி
பாடிடுவேன் எங்கும் எதிலும்
கலகம் போட்டித் துன்பமிலா
கண்ணியமிக்க செயல்பாடாகி
8. ஆகியே அறிவிப்பேன் மக்களிடை
அரங்கன் அவதார நோக்கம்
மகிழவே சிந்தைவழி பெருகி
மண்ணுலகில் நல்லத் தலைமைதனை
9. தலைமைதனை உருவாக்கும்படி
தக்க விழிப்புணர்வு கூடி
ஊழலற்ற பிழையற மாற்றம்
உயர்வானத் தலைமை தன்னை
10. தன்னையே நிறுவி எங்கிலும்
தனிப் பெருங்கருணைவடிவான
அண்ணல் அரங்கன் ஆசிபெற்ற
அகிலத்தில் ஞான ஆட்சிமலரும்
11. மலரும் கலிவினை முடித்து
மகான்கள் அனைவரும் இறங்க
வளரும் வளம் பெறும் ஞான
வடிவான உயர் புவியாகவே
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—